செய்தி வெளியீடு எண்: 199 நாள் : 21.04.2016

<u>பொது (தேர்தல்கள்–3) துறை</u>

<u>செய்தி வெளியீடு</u>

2016ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களைப் பெறுவது சம்பந்தமான தகவல்களை படிவம்–1 இல் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரிகள் 22.42016 அன்று வெளியிடுவர். 1881ஆம் ஆண்டு அந்நிய செலாவணிமுறிச் சட்டத்தின்கீழ் பொது விடுமுறை நாளான 24.4.2016 (ஞாயிற்றுக்கிழமை) நீங்கலாக, 22.4.2016 முதல் 29.4.2016 வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். 24.4.2016 (ஞாயிற்றுக்கிழமை) அன்று வேட்பு மனுக்களைப் பெற இயலாது.

வேட்புமனுவுடன் கீழ்க்காணும் ஆவணங்களை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பாளர் அளிக்க வேண்டும் –

(1) வேட்பு மனு (படிவம்–2பி)

(2) உறுதிமொழிப்படிவம் (படிவம்–26)

(3) பாக்கியின்மை சான்றாக கூடுதல் உறுதிமொழிப்படிவம்

(4) சான்றொப்பமிட்ட வாக்காளர் பட்டியல் (வேட்பாளர் வேறு தொகுதியில் வாக்காளராக இருக்கும்பட்சத்தில்)

(5) உரிய அலுவலரிடம் பெறப்பட்ட சாதிச் சான்றிதழ் (வேட்பாளர், பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் சார்ந்தவர் என்பதை கோரும்பட்சத்தில்)

(6) ரூ.10,000/– பிணையத் தொகை

(7) மேற்கூறிய பிணையத் தொகையில் பாதித்தொகை பட்டியல் இனத்தவர் / பழங்குடியின வகுப்பினைச் சார்ந்த வேட்பாளர்கள் செலுத்த வேண்டும். பொதுத் தொகுதியிலும் இது பொருந்தும்.

தேர்தலின்போது வேட்பாளர்களின் புகைப்படம் வாக்குச்சீட்டில் இடம்பெறுவதற்காக, இந்திய தேர்தல் ஆணையமானது வேட்பாளர் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்புமனுவுடன் அளிக்கக்கூடிய புகைப்படத்திற்கான அளவீடுகள் பின்வருமாறு தெரிவித்துள்ளது;–

(i) வேட்பாளர்கள், தங்களுடைய அண்மைக்கால புகைப்படத்தை அளிக்க வேண்டும். (தேர்தல் அறிவிக்கை வெளியிடப்படும் நாளுக்கு முந்தைய மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்)

(ii) புகைப்படம் 2 செ.மீ x 2.5 செ.மீ (2 செ.மீ அகலம் மற்றும் 2.5 செ.மீ உயரம்) அஞ்சல்தலை அளவில் வெள்ளை / வெளிர் சாம்பல் நிறம் பின்னணியோடு, முழு முகமும் புகைப்படக் கருவியை நோக்கிய வண்ணம், கண்கள் திறந்த நிலையில் இயல்பான முகத்

தோற்றத்தோடு இருக்க வேண்டும். புகைப்படமானது, வேட்பாளரின் வசதிக்கேற்ப வண்ணத்திலோ கருப்பு / வெள்ளை நிறத்திலோ இருக்கலாம்.

(iii) புகைப்படத்தில் இயல்பான உடையில் இருக்க வேண்டும். சீருடையில் எடுக்கப்பட்ட புகைப்படம் அனுமதிக்கப்பட மாட்டாது. குல்லாய் / தொப்பிகள் தவிர்க்கப்பட வேண்டும். அடர்வண்ணக் கண்ணாடிகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் இந்தியத் தேர்தல் ஆணையம் கடந்த வருகையின்போது மாநிலம் முழுவதும் அரசியல் கட்சியினரையும் வேட்பாளர்களையும் ஓட்டுக்காக பணம் கொடுக்க மாட்டோம் என்று உறுதிமொழி ஏற்க ஊக்கம் அளிப்போம் எனத் தெரிவித்துள்ளது. வேட்பாளர் வேட்பு மனுவை தாக்கல் செய்தபின், தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்திற்கு வெளியே, இந்த உறுதிமொழியை விருப்பத்தின்பேரில் ஏற்கலாம்.

இப்பொதுத் தேர்தலில் பெரும்பாலான தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அலுவலகங்கள் சட்டமன்றத்தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

வேட்பு மனுவினை தாக்கல் செய்யும்பொழுது தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் எல்லைக்குள் மூன்று வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

வேட்பு மனுவினை தாக்கல் செய்யும்பொழுது அதிகபட்சம், வேட்பாளர் உள்பட ஐந்து நபர்கள் மட்டுமே தேர்தல் நடத்தும் அதிகாரியின் அறைக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**